கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Elders Home Complex, Kandy Road, Kaithady, Jaffna

Our Ref:- NP/15/AD2/46(1) Your Ref:- 02.02.2016

திரு. பெ.இ.ரஞ்சன் (தலைவர்),
B.A தம்பிலேன் வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

1983 ம் ஆண்டின் 32ம் இலக்கமும், 1992ம் ஆண்டின் 11ம் இலக்கமும் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972ம் ஆண்டின் 5ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 60(அ) (2) பிரிவின் கிழ் ஆட்சேபனை தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் அளித்தல்.

தாங்கள் வரைவுள்ள யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தில் தலைவராக செயற்படுகையில் பின்வரும் குற்றச் செயல்களில் ஒன்றை அல்லது பலதை அல்லது எல்லாவற்றையும் இழைத்துள்ளீர்கள் எனக்கருதி, 1989ம் ஆண்டின் 12ம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர்விளைவுகள்) சட்டத்தின் 2.1 (ஆ) பிரிவுடனும் 1983ம் ஆண்டின் 32ம் இலக்கம், 1992ம் ஆண்டின் 11ம் இலக்கங் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். 1972ம் ஆண்டின் 5ம் இலக்க கூட்டுறவுச்சங்கங்கள் சட்டத்தின் 60(அ) (2)ம் பிரிவின் கீழ் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் தங்கள் மீது ஏன் தொடர் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகளை விளக்கமாக 29.02.2016ம் திகதிக்கு முன்பு எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கும்படி இத்தால் அறியத்தருகின்றேன்.

## குற்றச்சாட்டுக்களாவன.

### நெய்சீலர் இயந்திர கொள்வனவு தொடர்பாக

1. நெய் சீலர் இயந்திர கொள்வனவு தொடர்பாக நிபுணத்துவ ஆலோசனை மற்றும் சாத்தியக்கூற்றுக்கள் எவையும் பெறப்படவில்லை.
2. பத்திரிகை மூலமான பகிரங்க விளம்பரம் மூலம் கூறுவிலை எதுவும் பெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதுடன் கூறுவிலைகள் பெறுவதில் தாங்கள் தன்னிச்சையாக செயற்பட்டுள்ளீர்கள்.
3. குறித்த இயந்திர உபகரணம் இன்றுவரை பயன்படுத்தப்படாமல் சங்கத்தின் நிதி ரூபா.85680.00 முடக்கப்பட்டிருப்பதுடன் மேற்படி நிதியிழப்பு ஏற்படக் காரணமாக இருந்துள்ளீர்கள்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

### Milk Analizer இயந்திர கொள்வனவு தொடர்பாக

1. Milk Analizer இயந்திர கொள்வனவு தொடர்பாக நிபுணத்துவ ஆலோசனை மற்றும் சாத்தியக்கூற்றுக்கள் எவையும் பெறப்படவில்லை.
2. பத்திரிகை மூலமான பகிரங்க விளம்பரம் மூலம் கூறுவிலை எதுவும் பெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளீர்கள்.
3. முன்னர் பெறப்பட்ட உற்பத்தி குழுவில் ஆராயப்பட்ட 03 கூறுவிலைகளுக்கு மேலதிகமாக ஒரு கூறுவிலை பெறப்பட்டு கொள்வனவுத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை தன்னிச்சையான செயற்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது.
4. பல்வேறு கூறுகளைக் கண்டறியும் கருவியுடன் ஒருசில கூறுகளைக் கண்டறியும் கருவி ஒப்பிடப்பட்டுள்ளது. இதனால் சரியான கொள்வனவுத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

☎-CCD & RCS – 021 2057063 Asst. Commissioner – 021 2057064 Accountant – 021 320 2190
Gen – 021 2057062 Fax – 021 753 8366 E- mail :- ccdnp@mail.com

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Elders Home Complex, Kandy Road, Kaithady, Jaffna

Our Ref:- NP/15/AD2/46(1) Your Ref:- 02.02.2016

ஆழ்குளிரூட்டி கொள்வனவு தொடர்பாக

1. ஆழ்குளிரூட்டி கொள்வனவு தொடர்பாக நிபுணத்துவ ஆலோசனை மற்றும் சாத்தியக்கூற்றுக்கள் எவையும் பெறப்படவில்லை.
2. பத்திரிகை மூலமான பகிரங்க விளம்பரம் மூலம் கூறுவிலை எதுவும் பெறுவதற்குரிய நடவடிக்கை எடுப்பதில் நெறியாளர்குழு தவறியுள்ளது.
3. கொள்வனவு செய்யப்பட்ட பின்னரே கூறுவிலைகள் நெறியாளர்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இது ஒரு சரியான கொள்வனவு வழிமுறையை பின்பற்ற தவறியமையை எடுத்துக்காட்டுகின்றது.
4. ஆழ்குளிரூட்டி கொள்வனவு தொடர்பாக நிபுணத்துவ ஆலோசனை பெறப்படாமையால் கொள்வனவு செய்யப்பட்டு ஒருவார காலத்தினுள் குளிரூட்டி ஒன்று பழுதடைந்துள்ளது. இதனால் இதில் வைக்கப்பட்ட பால்உற்பத்திப் பொருட்கள் பழுதடைந்து சங்கத்துக்கு ரூபா. 36260.00 நிதியிழப்பு ஏற்பட காரணமாக இருந்துள்ளீர்கள்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

பால்குளிர்தாங்கி திருத்தம் தொடர்பாக

1. பால்குளிர்தாங்கி திருத்தம் தொடர்பாக நிபுணத்துவ ஆலோசனை மற்றும் சாத்தியக்கூற்றுக்கள் எவையும் பெறப்படவில்லை.
2. உரிய திருத்தம் தொடர்பாக மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்படவில்லை.
3. பத்திரிகை மூலம் இரண்டு தாங்கிகள் திருத்தம் தொடர்பாக கூறுவிலை கோரியிலிருந்து இரண்டு தாங்களும் திருத்துவதறகென கூறுவிலை சமர்பித்த நிறுவனத்தின் கூறுவிலைகள் ஆராயாது ஒரு தாங்கி மட்டும் திருத்துவதற்கென கூறுவிலை சமர்பித்த நிறுவனத்தின் கூறுவிலை நெறியாளர்குழுவில் ஆராயப்பட்டு திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமை தவறானதாகும்.
4. இரண்டு நிறுவனங்களின் கூறுவிலைகள் தொடர்பில் ஒப்பிட்டு ஆராயப்படாமல் தனித்து செலவுத் தொகையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை தவறான நடவடிக்கையாகும்.
5. கூறுவிலை நடைமுறைகள் (Tender Procedure) பின்பற்றப்படவில்லை.
6. திருத்தம் செய்யப்படாத தாங்கியை திருத்தும் இடத்துக்கு கொண்டு செல்ல அனுமதித்தது தவறானதாகும்.
7. இரண்டு தாங்கிகளும் திருத்தப்பட வேண்டிய நிலையில் இருந்தும் ஒரு தாங்கி மட்டும் திருத்தப்பட்டதுடன், மற்றைய தாங்கியில் நல்ல நிலையிலுள்ள உபகரணங்கள் இதற்கு மாற்றப்பட்டு நிதிமோசடி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
8. திருத்தம் தொடர்பாக உரிய நிறுவனத்திற்கும் சங்கத்துக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிட்ட சரத்துக்கள் குறித்த நிறுவனத்தால் மீறப்பட்டு சங்கத்துக்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்ட போதிலும் திருத்தத்துக்கான கொடுப்பனவு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.
9. தாங்கி திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக மேற்பார்வை செய்ய போதிய அனுபவம் இல்லாத ஒரு நெறியாளர்குழு உறுப்பினரை நியமித்தது தவறானதாகும்.
10. குறித்த தாங்கி திருத்தத்தின் பின்னரான செயற்பாடுகள் மற்றும் திருத்த வேலைகள் தொடர்பாக சங்க நிர்வாகம் தொழில்நுட்ப வல்லுனரைக் கொண்டு உறுதிப்படுத்த தவறியுள்ளது.
11. சங்கத்தில் சராசரியாக நாளாந்தம் 500 லீற்றருக்கு குறைவான பாலே உற்பத்திப் பகுதிக்கு அனுப்பப்படுகின்ற நிலை இருந்துள்ளது. இந்நிலையில் 03 நாட்களுக்கு மட்டும் சேமித்து வைக்கக்கூடிய 2000 லீற்றர் கொள்ளளவுடைய குளிர்தாங்கியை திருத்தம் செய்ய நெறியாளர்குழு நடவடிக்கை எடுத்தமை நெறியாளர்குழுவின் வினைத்திறனற்ற செயற்பாட்டை வெளிக்காட்டுகின்றது.
திருத்தம் மேற்கொள்ளப்பட்டு ஒரு சில மாதத்திலிருந்து இன்றுவரை குறித்த தாங்கி முழுமையாக பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளமை சங்கத்திற்கு பாரிய நிதியிழப்பை ஏற்படுத்தி தொழிற்படு மூலதன பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

முச்சக்கரவண்டி திருத்தம் தொடர்பாக (NPHV- 3147)

1. மேற்படி இலக்க முச்சக்கரவண்டி 2004ம் ஆண்டு காலப்பகுதியில் U. N. D. P நிறுவனத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டு சங்கத்தால் பாற்பொருள் உற்பத்தி

☎-CCD & RCS – 021 2057063 Asst. Commissioner – 021 2057064 Accountant – 021 320 2190

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Elders Home Complex, Kandy Road, Kaithady, Jaffna

Our Ref:- NP/15/AD2/46(1) Your Ref:- 02.02.2016

பகுதியில் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு இயந்திரத்தின் இயங்குநிலை தேய்வடைந்து அதற்கான உபகரணங்களை பெறமுடியாத நிலையில் இதனை பயணிகள் முச்சக்கரவண்டியாக மாற்றுவதற்கு நெறியாளர்குழு நடவடிக்கை மேற்கொண்டமை தவறானதாகும்.

2. மேற்படி இலக்க முச்சக்கரவண்டி பொருட்களை ஏற்றியிறக்கும் அமைப்பிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இதனை பயணிகள் முச்சக்கரவண்டியாக மாற்றியமைப்பதற்கு பொருத்தப்பாடு அற்றதாகக் காணப்பட்டதுடன் அது தற்போது பயன்படுத்தப்படாத நிலையில் இருப்பது சங்கத்திற்கு நிதியிழப்பை ஏற்படுத்தி நிதிமுடக்கத்தை ஏற்படுத்தியுள்ளீர்கள்.
3. இத்திருத்தம் தொடர்பாக பெறப்பட்ட கூறுவிலை மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதி பெறப்பட்ட தொகை என்பவற்றுக்கு மேலதிகமாக செலவு செய்யப்பட்டமை தவறானதாகும்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

## டைகல்சியம் பொஸ்பேற் தொடர்பாக

1. பொருள்தேவைப்பட்டியலில் இன்றி உரிய கொள்வனவு தீர்மானம் பின்பற்றப்பட்டால் அதிகளவில் கொள்வனவு செய்யப்பட்ட டைகல்சியம் பொஸ்பேற் தொடர்பாக பொறுப்பானவர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க தாங்கள் தவறியுள்ளீர்கள்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

## பணியாளர் நியமனம் தொடர்பாக

1. பதில்கடமை நியமனங்கள் தொடர்பில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அனுமதிகள் எதுவும் வழங்கப்படவில்லை.
2. பதில்கடமை நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும் பதில்கடமை கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை.
3. பதில்கடமை நியமனங்கள் வழங்கப்பட்ட பணியாளர்களுக்கு எழுத்து மூலமான கடமைப்பட்டியல் எதுவும் வழங்கப்படவில்லை.
4. பணியாளர்களின் உரிய அனுபவத்தகமை, கல்வித்தகமைகள் பரீட்சிக்கப்படாது பொறுப்பான பதவிகளில் பதில்கடமை நியமனங்கள் வழங்கியமை.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

## வாகன சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் தொடர்பாக

சங்கத்தின் பாவனையிலுள்ள வாகனங்களின் உட்பகுதியை தண்ணீரால் கழுவுவதற்கு பெரியளவிலான சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நெறியாளர்குழு நடவடிக்கை எடுத்தமையும், அவை பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளமையும் சங்கத்துக்கு தேவையற்ற நிதியிழப்பு ஒன்றை ஏற்படுத்தி இதனால் நிதிமுடக்கம் ஏற்பட காரணமாக இருந்துள்ளீர்கள்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

## வியாபார பொருட்களின் கழிவுகள் வழங்கியமை தொடர்பாக

1.பால்உற்பத்திப் பகுதியில் போதிய அனுபவமும் கல்வித்தகமையும் கொண்டிராத பணியாளர்களை பதில்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டு பெருந்தொகையான பொருட்கழிவுகள் வழங்கப்பட்டு சங்கத்துக்கு நிதியிழப்பை ஏற்படுத்த காரணமாக இருந்துள்ளீர்கள்.

2.பால்உற்பத்தி பொருட்களின் சந்தைவாய்ப்புக்கு ஏற்ப இருப்பு மட்டங்களை பேணாது மிதமிஞ்சிய அளவில் உற்பத்தியை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு பின்னர் அவை காலவதியாகியும், பழுதடைந்த நிலையிலும், கழிவுகள் வழங்கப்பட்டு சங்கத்துக்கு நிதியிழப்பை ஏற்படுத்த காரணமாக இருந்துள்ளீர்கள்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Elders Home Complex, Kandy Road, Kaithady, Jaffna

Our Ref:- NP/15/AD2/46(1) Your Ref:- 02.02.2016

3.தீவினபகுதி, பால்உற்பத்தி பகுதிகளில் கழிவுகள் வழங்குவது தொடர்பில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களின் 4/98, 5/2009, 4/2002 இலக்க சுற்றுநிருபங்களுக்கு முரணானதாகும்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

திரு. ம. மவுறிலியோ அவர்களின் சோர்வு விடயம் தொடர்பாக

1. துறைசார்ந்த அனுபவமும் பொருத்தமான கல்வித்தகமையும் இல்லாத ஒருவரை பால்பகுதி உற்பத்திப்பகுதி பொறுப்பாளராக நியமித்ததுடன் அவருக்கு எழுத்து மூலமான கடமைப்பட்டியல் எதுவும் வழங்கப்படவில்லை.
2. திரு. ம. மவுறிலியோ அவர்கள் பால்ப்பொருள் உற்பத்திப் பொறுப்பாளராக நியமிக்கும் போது வாகனப்பகுதி தளபாட உபகரணப்பகுதி பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்படாமல் இருந்தது தவறானதாகும்.
3. குறித்த தாங்கி திருத்தத்தின் பின்னரான செயற்பாடுகள் மற்றும் திருத்த வேலைகள் தொடர்பாக சங்க நிர்வாகம் தொழில்நுட்ப வல்லுனரைக் கொண்டு உறுதிப்படுத்த தவறியுள்ளது.
4. பால்பொருள் உற்பத்திகளின் சந்தை வாய்ப்புகள் மாரிகாலங்களில் குறைவு என தெரிந்தும் உற்பத்தியை மட்டுப்படுத்தாது மிதமிஞ்சிய அளவில் உற்பத்தி செய்து அவற்றை களஞ்சியப்படுத்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கியமை நெறியாளர்குழுவின் திட்டமிடப்படாத செயற்பாடாகும்.
5. மாற்று நடவடிக்கைகள் எதுவும் வகுக்கப்படாமல் பாலின் கொள்வனவு விற்பனை விலைகளை எழுந்தமானமாக நெறியாளர்குழு அதிகரிக்க முடிவு செய்தமையால் பாலின் கொள்வனவு அதிகரித்துள்ள போதிலும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைக்குரிய திட்டங்கள் வகுக்கப்படவில்லை.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் சங்க நெறியாளர் குழுவுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. இக் குற்றச்சாட்டுக்களுக்கு சங்க உபவிதி பிரிவு – 39 இன்படி நெறியாளர் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாவீர்கள்.

உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் தங்களின் பதில் கிடைக்காதவிடத்து ஆட்சேபனை எதுவும் இல்லை எனக்கருதிக்கொண்டு தொடர்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

திருமதி மதுமதி வசந்தகுமார்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச்சங்கப்பதிவாளரும் வடமாகாணம்.

பிரதி - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - யாழ்ப்பாணம்.